## சுவடியியல் புலம்

**நடத்தும்**

## ஈழத்துத் தமிழறிஞர்களின் செவ்வியல் தமிழ்ப் பணிகள்

## Contributions of Elam Tamil Scholars to Classical Tamil works

**பயிலரங்கம் - 14**

**(13.12.2023 - 22.12.2023)**

**அறிவிப்பும் அழைப்பும்**

ஈழத்து அறிஞர்கள் பலர் வரலாற்றுச் சிறப்புவாய்ந்த தமிழ்ப் பணிகளை ஆற்றியுள்ளனர். கல்வித் தேர்ச்சியாலும், ஆழமான புலமையாலும் ஈழத்து அறிஞர்களின் வழியாகத் தமிழ் நூல்கள் பல மேல்நாட்டுக்குச் சென்று பரவின. கூழங்கைத்தம்பிரான், சைமன் காசிச் செட்டி, ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை, வி. கனகசபைப் பிள்ளை, ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை, சி. கணேசையர், சுவாமி விபுலானந்தர், ந.சி. கந்தையா பிள்ளை முதலான பல ஈழத்து அறிஞர்கள் தமிழ்ப் பணியில் ஈடுபட்டுச் செயலாற்றியுள்ளனர்.

செவ்வியல் தமிழ் நூல்களில் உள்ள திருமுருகாற்றுப்படையை ஆறுமுக நாவலரும், கலித்தொகை, இறையனார் அகப்பொருள், தொல்காப்பியம் - பொருளதிகாரம் நச்சினார்க்கினியர் உரை, தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரை முதலான நூல்களைப் பதிப்பித்துத் தந்த சி.வை.தாமோதரம் பிள்ளையும் ஈழத்துத் தமிழர்களேயாவர்.

ஆறுமுக நாவலரும், சி.வை.தாமோதரம் பிள்ளையும் தமிழ் மொழிக்கும் தமிழருக்கும் பெருமைகள் பல சேர்த்தவர்கள். பல்கலைக்கழகங்களும் அரசாங்கமும் பல

காலமாகச் செய்ய வேண்டிய அரும் பெரும் தமிழ்ப் பணிகளை, தனியொரு மனிதர்களாக நின்று செய்து முடித்தவர்கள் ஆறுமுகநாவலரும், சி.வை.தாமோதரம் பிள்ளையும் ஆவர்.

ஈழத்துத் தமிழறிஞர்களுள் முக்கியமான ஆளுமையாகத் திகழும் மற்றொருவர் சி. கணேசையர் ஆவார். கணேசையரின் தொல்காப்பிய உரை விளக்கக் குறிப்புகள் தமிழுக்கு விளைந்த முக்கியமான அறிவுக்கொடைகளாகும். இவர், தொல்காப்பிய உரைகளின் சுவடிகளைத் தேடியெடுத்து அவற்றை ஒப்புநோக்கிப் பல ஆண்டு காலமாக உழைத்துக் குறிப்புகள் எழுதிக் கட்டுரைகளாக வெளியிட்டார். இலங்கையிலிருந்து மதுரைக்கு வந்து டி.கே.ராமானுஜ ஐயங்கார் உதவியுடன் தொல்காப்பிய ஏடுகளைச் சேகரித்துப் பாடவேறுபாட்டுக் குறிப்புகளை உருவாக்கினார். பின்னர் அவற்றைப் பதிப்பித்து வெளியிட்டார். அவை, எழுத்ததிகாரம் (1937), சொல்லதிகாரம் (1938), பொருளதிகாரம் முதற்பாகம் (1948), பொருளதிகாரம் இரண்டாம் பாகம் (1943) என்று நான்கு பகுதிகளாக வெளிவந்து தமிழுக்குப் பெருமை சேர்த்தன.

இப்படியான பல ஈழத்துத் தமிழறிஞர்களின் நீடித்து நிலைபெற்ற தமிழ்த் தொண்டுகள் பற்றியும் அவர்களது புதிப்புச் செயல்பாடுகள் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டிய செய்திகள் ஏராளமாக உள்ளன. அவைகளின் விழுமியங்களை எடுத்துரைக்கும் நோக்கோடு "ஈழத்துத் தமிழறிஞர்களின் செவ்வியல் தமிழ்ப் பணிகள்" என்னும் பொருண்மையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சுவடியியல் புலம் பயிரலரங்கம் ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளது.

இப்பயிலரங்கு 13.12.2023 முதல் 22.12.2023 முடிய பத்து நாட்கள் நடைபெறவுள்ளன. இப்பயிலரங்கில் **கல்லூரி, பல்கலைக்கழகம் மற்றும் ஆய்வு நிறுவனங்களில் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொண்டு வரும் ஆய்வாளர்கள்** கலந்துகொண்டு பயன்பெற அழைப்பு விடுக்கப்படுகிறது.

பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 30.

2. பயிரலரங்கு நடைபெறும் நாட்கள்: 13.12.2023 முதல் 22.12.2023 முடிய 10 நாட்கள்.
3. பயிலரங்கு நேரம்: காலை 10.00 – 01.00 & மாலை 02.00 – 05.00.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்குத் தேநீரும், மதிய உணவும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவு செய்து workshopc@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்பு கொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி / அலைபேசி வழியாகத் தொடர்பு கொள்ளக்கூடாது.
8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பப்படுதல் வேண்டும்.
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல் / புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் 05.12.2023. கால தாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தெர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 05.12.2023 அன்று மாலை மின்னஞ்சல் / புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.
13. இப்பயிலரங்கில் பங்கேற்போர் அனைத்து அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருவதைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்பட மாட்டாது.
14. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

सत्यमेव जयते

## சுவடியியல் புலம்

நடத்தும்

## ஈழத்துத் தமிழறிஞர்களின் செவ்வியல் தமிழ்ப் பணிகள்

## Contributions of Elam Tamil Scholars to Classical Tamil works

### பயிலரங்கம் - 14

(13.12.2023 - 22.12.2023)

### விண்ணப்பப் படிவம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர்\| Name | தமிழ் | | | | | நிழற்படம்/ Photo | |
| | | English | | | | | | |
| 2. | பிறந்த நாள் / வயது Date of Birth/ Age | | | | | | | |
| 3. | பாலினம் \| Gender (✓) | ஆண்/ Male | | பெண்/ Female | | திருநங்கை/ Transgender | | |
| 4. | வகுப்பு \| Class (✓) | | | பொது/ General | | இ.பி.வ.\| OBC | | பட்டியல் இனம் \| SC/ ST | |
| 5. | கல்வித் தகுதி \| Educational Qualification | | | | | | | |
| 6. | ஆய்வியல் நிறைஞர் & முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ ஆண்டு \| Date of Joining & year in M. Phil & Ph.D. | | | | | | | |

| | | |
|---|---|---|
| 7. | ஆய்வியல் நிறைஞர் & முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு \| M. Phil & Ph.D. Research Topic | |
| 8. | பல்கலைக்கழகம்/ கல்லூரி/ நிறுவன முகவரி (தொடர்பு எண் & மின்னஞ்சல்)<br><br>\| University / College/Institute Address (Contact number & Email) | |
| 9. | இல்ல முகவரி & தொடர்பு எண் \|Residential address & Contact number | |
| 10 | புலன எண் \| WhatsApp number | |
| 11 | செம்மொழி நிறுவனம் முந்தைய கல்வியாண்டுகளில் நடத்திய பயிலரங்குகளில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக \| Did you attend the workshop conducted by the CICT in previous academic years? If yes, please give details | ஆம் \| Yes<br><br>இல்லை\| No |
| | | |

(கையொப்பம்)

நெறியாளர் /துறைத் தலைவர்/

முதல்வர்/ பதிவாளர் உரிய முத்திரையுடன்

இடம்:

நாள்: